# பிரஜைகள் சபை



**பிரஜைகள் சபை**

முதற் பதிப்பு 2014 மே

ISBN : 978 955 4746 32 9

பக்க வடிவமைப்பு :வாக்யாறூ 011-2708377

அச்சாக்கம் : க்ளோப் பிரின்டிங் வர்க்ஸ் 011-2329739

வசதிப்படுத்துநர் நிலையம் :

**විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය**
24/2, 28 වෙනි පටුමග, මල් පාර, කොළඹ 07,
දුරකථන 0112 565304/06
0112 370801/3
ඊ-මේල් cpa@cpalanka.org
වෙබ් www.cpalanka.org

**மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம்**

24/2, 28வது ஒழுங்கை,
ஃப்ளவர் வீதி, கொழும்பு-7
தொ.பே : 0112 370801/3
0112 565304/06
ஈமேல் : cpa@cpalanka.org
www.cpalanka.org

## உள்ளடக்கம்


பல கருத்துக்கள் – ஓர் இணக்கப்பாடு 5

விடயப் பொருளும் பொறுப்புக்களும் 9

பிரஜைகள் குழுக்களின் விடயத் துறை 13

நல்லாட்சி 15

மனித மாண்பு, மொழி,
கலாச்சாரப் பன்மைத்துவம் 17

இளைஞர் பிரதிநிதித்துவம் 20

சிறுவர் மற்றும் பெண்கள் 22

பிரஜைகள் சபையின் யாப்பு 23

## பல கருத்துக்கள் – ஓர் இணக்கப்பாடு

மக்களின் நல்வாழ்வுடன் தொடர்புடைய சகல நிறுவனங்கள், சமூக - பொருளாதார - அரசியல் நியாயம் மதிக்கும் சமூக முறைமையை உருவாக்குவதற்கு கடப்பாடு கொண்டுள்ளதாக இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் அமைப்பின் 27(2)(அ) உறுப்புரையில் குறிப்பிடப்படுகின்றது. இதற்கு மேலதிகமாக பல்வேறு வர்த்தமானப் பத்திரிகைகள், சட்டதிட்டங்கள் மூலமும் பிரஜைகளின் உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. எனவே, இது மீறப்பட முடியாத பிரஜைகளின் உரிமையாகும். இந்த உரிமைகள் உரிய முறையில் கிடைக்காத போது, நேரடியாக இவ்வுரிமைகளையிட்டு இடையீடு செய்து அவற்றை வென்றெடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பது பிரஜைகளின் பொறுப்பாகும். இந்நேரடி செயற்பாடு பல்வேறு மட்டங்களில் இடம்பெறலாம். அதனை அடிமட்டத்திலிருந்து செயற்படுத்துவதற்கு பிரஜைகளின் பொறுப்புக்களைப் பற்றிய ஒரு கலந்துரையாடல் அவசியமாகும்.

நாட்டின் பிரஜைகள் என்ற வகையில், அரசியல் அமைப்பின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள உரிமைகளைப் பற்றிய முழுமையான விளக்கம் இன்மையால், அனேகமாக தாம் இழக்கும் சலுகைகளையோ உரிமைகளையோ பற்றிய பொறுப்பை கிராமவாசிகள் ஊழ்வினையிடம் ஒப்படைக்கின்றனர். இது “எமது பிறப்புரிமை” என்ற சிந்தனையே நிலவுகிறது. கண்ணுக்குத் தோற்றாத சக்திகளை நோக்கிச் சரணடைகின்றனர். இதன் மூலம், செயலிழந்த ஓர் அரச இயந்திரத்தின் வாழ்க்கை மேலும் உறுதிப்படுத்தப்பட்டு,மக்கள்பிரதிநிதிகளும்அரசஅதிகாரிகளும் தமது பொறுப்பை தட்டிக்கழிக்கும் நியாயமான பின்னணியும் சிருஷ்டிக்கப்படுகிறது. சிலவேளை மதத் தலைவர்களின் அமைப்புக்களும் இந்நிலைமையை சகித்துக்கொள்கின்றனர். பிரஜைகளின் தரப்பிலிருந்து நோக்குகையில் இது மிகவும் கவலைக்கிடமான நிலமையாகும். இத்தகைய சமூகச் சூழலில் மதிநுட்பமும் திறனாய்வும் செயற்படாமல், மூட நம்பிக்கைகளும் விரக்தியும் கோலோச்சுகின்றன.

இது சமூகத்தின் எதிர்காலப் பயணத்திற்குப் பாரிய தடையாகும்.சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் கடந்த போதிலும், வளர்ச்சியடைந்த பிரஜைகள் சமூகத்தை உருவாக்குவது மிகவும் மந்த கதியிலேயே இடம்பெறுகிறது. இதன் காரணமாக, பரஸ்பரம் மதித்து நடத்தல், வளங்களைப் பகிர்ந்து கொள்ளுதல், சகவாழ்வு, பரஸ்பர உதவி, சமூக முன்னேற்றத்திற்கான



தொலைநோக்கு என்பன நெருக்கடிக்குள்ளாகியுள்ளன. இந்தப் புவியில் வாழும் மனிதன் உட்பட மரஞ்செடி கொடிகள், விலங்கினங்கள், வானத்தில் பறக்கும் பறவைகள் ஆகிய சகல சீவராசிகளினதும் உயிர் வாழ்க்கையை மதிக்கும் மரபு மூலம் உறுதிப்படுத்தப்பட்ட உயிர் வாழும் உரிமை மற்றும் சமத்துவம் பற்றிய தத்துவம் பல்வேறு காரணங்களால் மூடி மறைக்கப்பட்டுள்ளன.

எந்த அபிவிருத்தித் திட்டங்கள் முன்வைக்கப்பட்டாலும் அவை பயன்பெறாமைக்குக் காரணம் இத்துரதிர்ஷ்ட நிலமையாகும். பிரஜைகள் சபை இத்தகைய கலந்துரையாடலின் பெறுபேறாகவே சிருஷ்டிக்கப்படுகிறது. அரசு அமுலாக்கும் நிர்வாக மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் எத்தகைய கட்டமைப்பின்

கீழ் செயற்பட்டாலும், அவை கிராமம் என்ற அலகை முன்னிலைப்படுத்துகின்றன. இங்கு மூன்று தரப்பினர் செயற்படுகின்றனர். அதாவது

- **கிராமிய சமூகம்**
- **சேவை நிறுவனங்கள்**
- **அரசு**

அரசுக்கும் கிராமிய சமூகத்துக்கும் இடையே நிலவும் உறவுகள், சேவை நிறுவனங்களின் ஊடாகவே கட்டியெழுப்பப்படுகின்றன. பல்வேறு சிக்கலான காரணங்களினால் இவை சரியான முறையில் அமுல்படுத்தப்படுவதில்லை. இவற்றை அடையாளம் காண்பதும், அவசியமான தீர்வுகளைக் காணும் ஆற்றலும் பிரஜைகள் சபைக்கு உண்டு.

## விடயப் பொருளும் பொறுப்புக்களும்

1. கிராமத்திற்கு சேவை வழங்கும் நிறுவனக் கட்டமைப்பை அடையாளம் காணுதல்;

2. இச் சேவை வழங்குவதில் காணப்படும் மந்தமான போக்கு அல்லது சிக்கலான தன்மை நிலவினால் அதற்கான காரணிகள் என்பவற்றை அடையாளம் கண்டு தேவைக்கேற்ப இடையீடு செய்தல்;

3. மேற்படி சேவைகளை அமுல்படுத்தும்போது இலஞ்சம் அல்லது ஊழல், மோசடிகள் இடம்பெறுகின்றதா என விழிப்பாக இருத்தல்;

4. அமுலாக்கப்படும் சேவைகள் கிராமிய சமூகத்தின் நீண்டகால மரபிற்கு ஒரு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமுலாக்கப்படுகின்றதா என மிகக் கவனமாக இருத்தல்;

5. அமுலாக்கப்படும் சேவைகள் கிராமிய சுற்றாடல் முறைமைகளுக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றதா

என விழிப்பாக இருத்தல். இது பற்றி மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துதல்;

6. சேவைகள் வழங்குகின்ற போது பாரபட்சங்கள் இடம்பெறுகின்றதா என விழிப்பாய் இருத்தல்;.

7. சேவைகளைப் பெறும்போது மோசடிகள் இடம்பெற்றால், அவற்றிற்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கிராமிய சமூகத்திற்கு அறிவூட்டுதலும் அவசியமான ஒத்துழைப்பை வழங்குதலும்;

8. அரச நிறுவனங்களுக்கும் கிராமிய சமூகத்திற்கும் வசதி செய்பவராக மேற்படி சேவைகளின் முன்னேற்றத்தை கிராமத்திற்கு வழங்குதல்;

9. கிராமிய சமூகத்தில் இரு மொழிக்கொள்கையை அமுலாக்குவதற்கு பங்களிப்புச் செய்தல்;

10. சக வாழ்வை முன்னெடுப்பதற்கு தடைகளைப் போடும் குழுக்களின் செயற்பாட்டை பலவீனப்படுத்துவதற்கு கிராமியச் சமூகத்தை உளவியல் ரீதியில் வலுவடையச் செய்தல்;

11. பன்மைத்துவக் கலாசாரம் பற்றிய சகிப்புத் தன்மைக்கான வழிகாட்டல்;

12. கிராமிய சமூகத்தின் கல்வி மற்றும் சுகாதார குறை விருத்திகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளையும் அடையாளம் கண்டு, மாற்று யோசனைகளை முன் வைத்தல்;

13. கிராமத்திற்குப் பொருத்தமான திட்டங்களை முன்வைத்தல்;

14. பிரதேசத்திற்கே உரித்தான கிராமியக் கலைகளையும் இலக்கியங்களையும் மேம்படுத்தும் மைய நிலையங்களை ஆரம்பித்துப் பராமரித்தல்.

15. இயற்கைக்கும் மனிதனுக்கும் இடையில் நிலைபேறான வாழ்வை. உறுதிப்படுத்தக்கூடிய வகையில் இயற்கை விவசாயத்தை ஒன்றிணைத்து நச்சுக் கலக்காத உணவுக் கலாசாரத்திற்குத் தேவையான வழிகாட்டலை மேற்கொள்ளுதல்;

16. பிரஜைகள் சபை எந்த வகையிலும் அரச எதிர்ப்பு அமைப்பாக இருக்கக் கூடாது;

17. எந்த அரசாங்கத்தின் கீழும் பிரஜைகளுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் பற்றிய கூருணர்வுடன் பிரஜைகள் சபை செயற்படுதல்;

18. எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்த அங்கத்தவரும் பிரஜைகள் சபையில் அங்கம் வகிக்க முடியும்;

19. அரச நிறுவனங்கள் செயற்படுத்தும் சில சேவைகள் செயலிழக்கும் போது, பிரஜைகள் சபையின் இடையீடு, அரசை சங்கடத்தில் மாட்டுவதற்குப் பதிலாக மக்கள் சேவையைஇலகுவாகவழங்குவதற்குமேற்கொள்ளப்படும் நெகிழ்ச்சித் தன்மையான இடையீடாக அது அமைதல்;

20. பிரஜைகள் சபையின் ஆண்டறிக்கை-நடப்பாண்டில் அதன் நடவடிக்கைகள், அவற்றின் முன்னேற்றம், பலவீனங்கள், நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் என்பன திறனாய்வுக்கு உட்படுத்தப்பட்டு பகிரங்கப்படுத்தப்படுதல்;

21. பிரஜைகள் சபை செயற்படும் போது பல்வேறு தரப்பினர் பல்வேறு வகையில் அவற்றை பிரதிபலிக்கக் கூடும். சில பிரதிபலிப்புக்கள் கடுமையானவையாக அமையலாம். ஆனால், பிரஜைகள் சபையின் தலைமைத்துவமும் செயற்பாட்டாளர்களும் அத்தகைய சந்தர்ப்பங்களில் அகிம்சை வழியில் சகிப்புத் தன்மையுடன் செயற்பட வேண்டும்.



# பிரஜைகள் குழுக்களின் விடயத் துறை

## சுற்றாடலும் மனிதனும்

1. கிராமத்தில் மேற்கொள்ளப்படும் விவசாயம், கால்நடை வளங்கள் மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளின் இயல்பு, அவற்றின் பயன்கள், கிராமிய வாழ்வுக்கு அவற்றால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் பின்னடைவுகள் என்பவற்றைக் கலந்துரையாடுதல்;

2. கிராமத்தின் புவியியல் மற்றும் சமூக சுற்றாடலுக்கு உசிதமான பயிர்ச்செய்கை பற்றி கவனம் செலுத்துதல்;

3. பயிர்ச்செய்கையின் போது பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்களின் தீய விளைவுகளைக் குறைப்பதற்கு ஒன்றிணைந்த உயிரியல் கட்டுப்பாட்டிற்கு இயற்கைப் பயிர்ச்செய்கைக்கு பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளுதல்;

4. விவசாயப் பண்டங்களின் உற்பத்தி, சந்தைப்படுத்தல் மற்றும் பயன்பாடு தொடர்பாக எதிர்நோக்கும்

பிரச்சனைகளைக் கலந்துரையாடி மாற்று முறைமைகளை அடையாளம் காணுதல்;

5. தேசிய மருத்துவச் செடிகளை பேணிப் பாதுகாத்தல், மேம்படுத்தல் மற்றும் நிலைபேறான பயன்பாடு பற்றிய கவனத்தை ஈர்த்தல்;

6. கிராமத்தில் தாவரங்களைப் பாதுகாக்கக் கூடிய மேம்படுத்தக்கூடிய நிகழ்ச்சித் திட்டங்களை ஆரம்பித்தல். உதாரணம்: பாடசாலையில் ஒரு பிள்ளையைச் சேர்க்கும் போது ஒரு செடியை வெகுமதியாக வழங்குதல். அப்பிள்ளை பாடசாலையை விட்டு விலகும் வரை மேற்படிச் செடியைப் பாதுகாத்தல்;

7. சுற்றாடலின் சமநிலை வீழ்ச்சியடைவதன் காரணமாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளையிட்டு ஓர் உரையாடலை ஆரம்பித்தல். உதாரணம்: சுரங்கங்களை வெட்டுதல், ஆறுகளிலிருந்து மணலை பாரிய அளவில் சேகரித்தல் குப்பை மேடுகளைக் குவித்தல், காடுகளுக்குத் தீ வைத்தல்;

8. உயிர்களின் பன்மைத்துவத்திற்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய போக்குகளை அடையாளம் காண்க. உள்நாட்டு விதைகள்,நீர் வளங்களின் ஆரம்பம், வனசீவராசிகள், தாவரங்களின் பராமரிப்பு உரிமைகள் தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை அடையாளம் கண்டு அவற்றைத் தடுப்பதற்கு நேரடியாகப் பங்களிப்புச் செய்தல்.



## நல்லாட்சி

1. கிராமத்திற்குச் சேவை வழங்கும் நிறுவனங்கள், அவற்றினால் கிடைக்கும் சேவைகளை வரைவிலக்கணம் செய்தல். அவையாவன:

பொலிஸ், பிரதேசச் செயலகம், குடும்ப சுகாதார சேவை, கிராம உத்தியோகத்தர், கமத்தொழில் சேவை உத்தியோகத்தர். சமுர்த்தி ஊக்குவிப்பாளர். தோட்டத் துறை மீனவர் சங்கங்கள், பெண்கள் அமைப்புக்கள், மரண நன்கொடைச் சங்கங்கள். முச்சக்கர வண்டிச் சங்கங்கள், மத ஸ்தாபனங்கள், மக்கள் சுகாதாரப் பரிசோதகர்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள், மாகாண சபைகள், மத்திய அரசாங்கம் என்பனவாகும்.

2. மேற்படி நிறுவனங்களிலிருந்து கிடைக்கும் சேவைகள் உரிய முறையில் கிடைக்கின்றனவா ?

3. சேவை வழங்குநர் மற்றும் சேவை பெறுநர் ஆகிய தரப்பினரினால் ஏற்படும் குற்றம் குறைகள் யாவை?

4. இவற்றை எவ்வாறு தவிர்த்துக்கொள்ளலாம்?

இது பற்றிய ஒரு கலந்துரையாடலை உருவாக்கி அவசியமான இடையீடுகளைச் செய்தல்.

## மனித மாண்பு – மொழி கலாச்சாரப் பன்மைத்துவம்

1. கிராமத்தில் வாழும் பல்வேறு சாதி அடிப்படையிலான தொழில்கள் மதங்கள் இனங்கள் ஆகிய வித்தியாசமான நபர்களுக்கு பாரபட்சமான கவனிக்கும் போக்குகளை அடையாளம் கண்டு, அவற்றை தவிர்ப்பதற்காகச் செயற்படுதல்.

2. சர்வமத நிகழ்ச்சித் திட்டங்கள், சர்வமத பரிவர்த்தனை நிகழ்ச்சிகள் அனைத்து மதங்களினதும் விழுமியங்களை மேம்படுத்தும் கலந்துரையாடல்களை ஆரம்பித்தல்.

கலாசாரம் என்பது மனிதன் சிருஷ்டித்த வளங்களை நியாயமான முறையில் பகிர்ந்துகொண்டு திருப்திகரமான முறையில் வாழ்வதாகும். கலாசார வாழ்வை இழத்தல் என்பது திருப்தியற்ற வாழ்க்கையை வாழ்வதாகும்.



1. மொழி உரிமைகளைப் பேணுதல். கலாசாரப் பொக்கிஷங்களைப் பேணுதலும் மேம்படுத்தலும். எந்தவொரு கிராமத்திலும் பொதுவான கலாசாரமும் வளங்களும் கிராமத்திற்கே உரித்தான கலாசாரமும் தொடர்ந்து நிலவி வருகிறது. பாரம்பரியக் கலைகள் இருக்கின்றன. மரபு ரீதியான பாரம்பரியக் கலைச் சிருஷ்டிகளை வழங்கும் கலைஞர்கள் உயிர் வாழ்கின்றனர. அவர்கள் தமது கலை ஆற்றலுக்கு அமைய அபிமானத்துடனும் கௌரவத்துடனும் வாழக்கூடிய ஒரு சூழமையை உருவாக்குதல்.

2. மேற்படி கலைகளை மேம்படுத்துவதும் அவர்களுடைய தொழில்மட்டங்களை மேம்படுத்துவதற்கு குறிப்பிட்ட

நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அவற்றை மேம்படுத்துதல். அவர்களுடைய தொழில் திறனை மேம்படுத்துவதற்கு குறித்துரைக்கப்பட்ட நிறுவனங்களோடு தொடர்பு கொண்டு நடைமுறை ரீதியான ஒரு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

3. கிராம மக்களின் இலக்கியச் சுவையை மேம்படுத்துவதற்கு இலக்கிய, கலை, கட்புலக் கலை கிராமியக் கலை என்பன பற்றிய உரையாடல்களை செயற்படுத்தல்

4. பிரஜைகள் என்பதை நேரடியாக செயற்படுத்துவதற்கு அவசியமான ஆவணங்கள் புத்தகங்கள், இலக்கிய நூல்கள் சினிமான தொலைக்காட்சி நாடகங்கள் ஒலி - ஒளி நாடாக்கள் என்பவற்றை உள்ளடக்கிய ஒரு நூல் நிலையத்தைப் பராமரித்தல்.

5. நடமாடும் நூல் நிலையத்தை ஆரம்பித்தல்.

## இளைஞர் பிரதிநிதித்துவம்

1 இளைஞர் சமூகத்திற்கு முக்கியத்துவம் வாய்ந்த கிராமத்திற்கே உரித்தான நிலைமைகளையும் பொதுவான நிலைமைகளையும் மீளாய்வு செய்தல்



2 இளைஞர்களின் திறனாய்வு ஆற்றலை மேம்படுத்துதல்

3 இளைஞர்களின் சிருஷ்டிகரமான பங்களிப்பை கிராமத்தின் அபிவிருத்திக்காகப் பயன்படுத்துதல்.

4. திட்டமிடும் போதும் தீர்மானங்களை மேற்கொள்ளும் போதும் இளைஞர்களின் பங்களிப்பைப் பெறுதல்.

5. இளைஞர்களின் திறமைகளையும் புதிய சிருஷ்டிகரமான ஆற்றலையும் அபிவிருத்தி செய்யும் சந்தர்ப்பங்களை அவர்களுக்கு வழங்குதல்.

6. பொது நிகழ்ச்சித் திட்டங்களின்போது இளைஞர் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ளுதல்

7. பகுப்பாய்வு திறனாய்வு தகவல்களைச் சேகரித்தல் என்பவற்றிற்கு இளைஞர் குழுக்களை உருவாக்குதல்.



## சிறுவர் மற்றும் பெண்கள்

1 கிராமத்தின் புவியியல் மற்றும் சமூக சுற்றாடலுக்கு ஏற்ப விசேடமாகபெண்களுக்கும்,விசேடதேவையுள்ளோருக்கும், பிள்ளைகளுக்கும் அவசியமான சேவைகளையும் நலன்புரிச் சேவைகளையும் அடையாளம் காணுதல்.

2 பிள்ளைகளுக்கு பிள்ளைகளின் வாழ்க்கையை வழங்குதல்.

3 பிள்ளைகளையும் பெண்களையும் கிராமத்தின் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் பங்குபற்றச் செய்தல்

4 பெண்கள் சிறுவர் உரிமைகளைப் பேணுதல்.

5 பெண்களின் கைப்பணி உற்பத்திப் பொருட்களை மேம்பாடடையச் செய்து ஊக்குவித்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.

6 இலவச சுகாதாரம் ஊட்டச்சத்து மற்றும் உளவியல் சுகாதார சிகிச்சை நிலையங்களை நடத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

## பிரஜைகள் சபையின் யாப்பு

1. அமைப்பின் பெயர்: ......................................

2. விலாசம்:..........................................................
.......................................................................

3. மாவட்டம் : .............................................................

4. பிரதேசச் செயலகப் பிரிவு : ..............................

5. **தொலைநோக்கு**: திறனாய்வும் செயற்பாடும் கொண்ட பிரஜைகள் சமூகம்

6. **செயற்பணி:** பிரஜைகளின் செயற்பாடுடனான பங்களிப்பை பெற்றுக்கொண்டு அவர்களுடைய இணக்கப்பாட்டுடன் ஜனநாயகம், நல்லாட்சி, சக வாழ்வு, மற்றும் சமூக, பொருளாதார, கலாசாரத்தை மேம்பாடடையச் செய்து உறுதிப்படுத்துதல்

## 7. குறிக்கோள்:

1. கிராமம் என்ற அலகில் பிரஜையின் வகிபாத்திரத்தை அர்த்தமுள்ளதாக்குதல்

2. பிரஜைகளினால் சமூகத்திற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய பொறுப்பும் கடமைகளும்

3. பிரஜைகளின் தேவைகளை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டுள்ள நிறுவனக் கட்டமைப்பின் சாதகமான அம்சங்களையும் பாதகமான அம்சங்களையும் அடையாளம் கண்டு அவற்றை இற்றைநாள்படுத்துவதற்கு பிரஜைகளுக்கு வலுவூட்டுதல்.

4. சிருஷ்டிகரமான, புத்திகூர்மையுடைய திறனாய்வுகொண்ட பிரஜையை உருவாக்குதல்.

## 8. கிராமத்தில் பௌதீக மற்றும் மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்கு பிரஜைகளின் பங்களிப்பைப் பெற்று அதில் பொருளாதார மற்றும் சமூக பயன்களினூடாக கிராமிய வாழ்க்கையை எழுச்சியுறச் செய்தல்.

## 9. கிராமத்தோடு தொடர்பான சகல நடவடிக்கைகளின் போதும் இரு மொழிப்பாவனையை அமுல்படுத்துவதற்கு இடையீடு செய்தல்.

## 10. அங்கத்துவம்

1. குறிப்பிட்ட கிராம உத்தியோகத்தர் பிரிவில் வசிக்கும் ஒருவராய் இருத்தல் வேண்டும்.

2. பிரஜைகள் சபையின் நிகழ்ச்சித் திட்டங்களுடனும் அதன் நடவடிக்கைகளுடனும் இணங்குபவராய் இருத்தல் வேண்டும்.

3. அங்கத்துவத்தை எதிர்பார்ப்பவர் ஏதாவதொரு தொண்டர் அமைப்பில் உறுப்பினராய் இருத்தல் வேண்டும்.

4. எந்தவொரு தொண்டர் அமைப்பினதும் உறுப்பினரல்லாத ஒருவர் அங்கத்துவத்தைப் பெறுகையில், சமூகச் செயற்பாட்டாளராக இரண்டு தொண்டர் ஸ்தாபனங்களின் முன் மொழிவு வழிமொழிவு மூலம் பிரேரிக்கப்பட வேண்டும்.

5. ஒரு குறிப்பிட்ட தொண்டர் அமைப்பில் அங்கத்துவம் இடைநிறுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் பிரஜைகள் சபையின் அங்கத்துவமும் ரத்தாகும். அத்தகைய சந்தர்ப்பத்தில் பிரஜைகள் சபைக்குரித்தான தொண்டர் அமைப்புச் சபைக்கு உரித்தான இரண்டு தொண்டர் அமைப்புக்களின் முன்மொழிவு வழிமொழிவு மூலம் அவருக்கு மீண்டும் உறுப்புரிமை கிடைக்கும் சந்தர்ப்பம் கிட்டும்.

6. பிரஜைகள் சபையின் யாப்பை மீறும் உறுப்பினர் ஆலோசனைச் சபையின் ஒழுக்காற்றுக் குழுவின் மூலம் குற்றவாளியென தீர்ப்பளிக்கப்பட்டால் அவருடைய அங்கத்துவம் ரத்தாகும்.

7. 3 பொதுச் சபைக் கூட்டங்களுக்கு தொடர்ச்சியாக சமூகம் தராத அங்கத்தவர் பிரஜைகள் சபையின் அங்கத்துவத்தை இழப்பார்.

## 11. ஆட்சிக்குழு

1. பிரஜைகள் சபையின் தலைவர், உப தலைவர், செயலாளர், உப செயலாளர், பொருளாளர், செயற்குழு உறுப்பினர்கள், உப குழுக்களின் தலைவர் அல்லது செயலாளர்கள் ஆட்சிக்குழுவை பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்.

2. பிரஜைகள் குழுக்களின் கடமைகளை அவதானித்தல், கண்காணித்தல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் தேவைப்படும் போது ஆலோசனை வழங்குதல் என்பன ஆட்சிக் குழுவின் பொறுப்பாகும்.

3. ஆட்சிக்குழு விசேடத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது பொதுச் சபையைக் கூட்ட வேண்டும்.

4. பிரஜைகள் சபையின் அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளூராட்சி நிறுவனங்கள் மற்றும் மத்திய அரசாங்கத்திற்கு ஆட்சிக் குழுவினாலேயே அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

5. ஆட்சிக் குழுவின் உறுப்பினர்கள் ஆண்டு தோறும் தெரிவு செய்யப்படுவார்கள்.

## 12. ஆலோசனைக்குழு

1. கட்டமைப்பு : கிராம உத்தியோகத்தர், பாடசாலை அதிபர், மதத் தலைவர், சமாதான நீதவான்கள் மற்றும் ஆட்சிக்குழு முன்மொழியும் பிரமுகர்கள். இதன் என்ணிக்கையை ஆட்சிக்குழு தீர்மானிக்கும்.

2. ஆலோசனைக்குழு ஆட்சிக்குழுவினால் நியமிக்கப்படும்.

3. ஆட்சிக்குழுவிற்கு அவசியமான வழிகாட்டல்கள் மற்றும் அதன் நடவடிக்கைகளை கண்காணித்தல் என்பன ஆலோசனைக் குழுவின் பொறுப்பாகும்.

4. பிரஜைகள் சபையின் அங்கத்தவர்களின் யாப்பு விரோத மற்றும் ஒழுக்க விரோத நடத்தைகள் பற்றி ஆராய்ந்து இறுதித் தீர்மானத்தை ஆலோசனைக் குழு ஆட்சிக்குழுவிற்கு வழங்கும்.

5. மோதல்கள் தொடர்பான இணக்கப்பாடுகளின் போது இது இணக்கச் சபையாகவும் செயற்படும்.

## 13. கட்டமைப்பும் அமைப்பும்

1. ஒரு கிராம சேவைப் பிரிவிற்கு ஒரு பிரஜைகள் சபை அமைக்கப்படும்

2. கிராம சேவைப் பிரிவின் விசாலமான தன்மை மற்றும் புவியியல் அமைப்பு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு கிராமங்களினதும் கிராம சபைகளினதும் தேவைக்கு அமைய சில உப குழுக்களை அமைக்க முடியும்.

## 14. அங்கத்தவர்களின் கடமைகள்

1. பொதுச்சபைக் கூட்டங்களுக்கு கட்டாயமாக சமூகம் தர வேண்டும்.

2. எந்தவொரு அங்கத்தவரும் யோசனைகளை முன்மொழிய முடியும்.

## 15. பொதுச் சபை

1. வருடம் ஒன்றிற்கு பொதுச் சபை மும்முறை கூட வேண்டும்.

2. குறைந்த பட்சம் 25 அங்கத்தவராவது பங்குபற்ற வேண்டும்.

## 16. உப குழுக்கள்

1. சுற்றாடலும் மனிதனும்

2. நல்லாட்சி

3. மனித கௌரவமும் கலாசாரத்தின் பன்மைத்துவமும்

4. இளைஞர் பிரதிநித்துவம்

5. பிள்ளைகளும் பெண்களும்

உள்ளடக்கம் : குறைந்த பட்சம் 5 பேராவது இவ்வுபகுழுவில் அங்கம் வகிக்க வேண்டும்.

உப குழுவில் - தலைவர், செயலாளர், கட்டாயமாக பங்குபற்ற வேண்டும். உப குழு மேற்கொள்ளும் தீர்மானங்களை கட்டாயமாக பொதுச் சபைக்கு அறிவித்தல் வேண்டும்.

## 17. நிதி சேகரித்தலும் பயன்பாடும்

1. அங்கீகரிக்கப்பட்ட நிதி ஒழுங்குவிதிகளுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

2. ஆட்சிக்குழு தெரிவு செய்யும் ஒரு நிறுவனம் பிரஜைகள் சபையின் கணக்குகளை கணக்காய்வு செய்தல் வேண்டும்.

3. ஆலோசனைச் சபையின் அங்கீகாரத்துடன் நிதி சேகரிக்கும் அதிகாரம் நிதி உப குழுவிடம் வழங்கப்படும்.

4. அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கும் நிதி நன்கொடைகளைப் பெற்றுக்கொள்வதற்கு அதிகாரம் உண்டு.

5. பிரஜைகள் சபையின் குறிக்கோள்களுக்கு முரணற்ற வகையில் பல்வேறு நடவடிக்கைகள் மூலம் நிதி சேகரிக்க முடியும்.

6. நன்கொடையாளர்களிடமிருந்தும் வாழ்த்துத் தெரிவிப்பவர்களிடமிருந்தும் நிதி சேகரிக்க முடியும்..

7. வங்கியிலிருந்து பணம் மீளப் பெறும்போது பொருளாளரின் கையொப்பம் கட்டாயமாக இடப்பட வேண்டும். இதற்கு மேலதிகமாக தலைவர் அல்லது செயலாளர் ஆகிய இருவரில் ஒருவரது கையொப்பம் அவசியமாகும்.

## 18. பதிவு செய்தல்

சகல பிரஜைகள் சபைகளும் குறிப்பிட்ட பிரதேசச் செயலகப் பிரிவில் சமூக சேவை நிறுவனமாக பதிவு செய்யப்பட வேண்டும்

## 19. கூட்டங்கள்

உப குழுக்கள் - அவசியத்தின் நிமித்தம் கூடும்.

ஆட்சிக்குழு – மாதம் ஒரு முறை கூடும்

பொதுச் சபை - மூன்ற மாதத்திற்கு ஒரு முறை கூடும்.

விசேட தேவைகளின் நிமித்தமும் பொதுச் சபை கூடும்.